தென்றல்

வார இதழ்

ஆசிரியர்:
கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 6 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, மார்கழி 4 (19-12-'59). சனிக்கிழமை | இதழ் 27

புல்லும் படையாகும்

செங்குருதி பாயும் வெங்களங்கள், மறவர்களின் உடல் வலிவை மட்டும் பரிசோதித்துப் பார்ப்பன அல்ல. அன்னாரின் அறிவு, நேரத்திற்கேற்பச் செயல்படுகிறதா என்றும் சோதித்திருக்கின்றன அக்களங்கள்.

ஒருவன் காட்டு வழியே சைக்கிளில் சென்றுகொண்டிருக்கையில், சைக்கிள் சங்கிலி அறுந்துவிட்டது. சங்கிலியை மறுபடியும் சேர்த்துவைத்தால்தான் சைக்கிள் ஓடும். தலையைச் சொரிந்துகொண்டிருக்கையில் திடீரென ஓர் எண்ணம் தோன்றியது. காட்டில் கிடந்த ஒரு தடித்த கூர்மையான முள்ளைச் சங்கிலியில் "ரிவிட்"டுக்குப் பதிலாகக் குத்திச் செம்மை செய்து வண்டியை ஓட்டி அடுத்த ஊர் போய்ச் சேர்ந்து முறைப்படி செம்மை செய்துகொண்டானும். இப்படி நேரத்திற்கேற்ற அறிவு எல்லோருக்கும் முளைத்தால்...துன்பங்களை எளிதில் கடக்கலாம்.

போர்க்களங்களிலும் இப்படி நேரத்திற்கேற்ற அறிவு மிக மிக வேண்டப்படுகிறது. இந்த முறையில் கிடைத்ததைக் கொண்டு போரிட்டு வருபவன் அருகே வெற்றி சிரிக்கும். இதைக் கேள் தம்பி!

சிற்றரசன் ஒருவன், வீரம் பொங்க வேலொன்றை வேழமொன்றின் மீதெறிகிறான். சற்று நேரத்தில் மாற்றான் ஒருவன் அவன் மீது ஒரு வேலை வீசுகிறான்; அது அவன் நெஞ்சில் பதிகிறது. கையில் கருவி ஏதுமற்ற சிற்றரசன் தன் பகைவனைத் தாக்க வேறு வழி ஏதுமின்றி, பகைவன் தன் மீது எறிந்த வேலையே பறித்துத் திரும்பவும் எறிந்து வீரம் காட்டுகிறான். இப்படிப்பட்ட வீரர்களை; இலக்கிய வீதிக்குள் புகுந்தால் நெடுகப் பார்த்துக்கொண்டே போகலாம். அவர்களுள் ஒரு சிலரை இங்கே பார், தம்பி!

வில் வீரர்களைவிடக் குதிரை வீரர்கள் தாழ்ந்தவர்களா? தங்கள் மார்பிலே பாய்ந்த நெடும் அம்புகளைப் பிடுங்குகின்றனர். பிடுங்கிய அம்புகளை எதிரில் நிற்கும் மாற்றார் மீது வீசுகிறார்கள்.

இளந் தம்பி! நீ திருக்குறள் படித்திருப்பாயே. போர்க்களத்திலே யார் வந்தாலும் எதிர்த்து நின்று போரிடுகிறான் ஒரு மறவன். அவன் கண்ணிலே ஒரு யானை பட்டது. உவகை பெருகிற்று. சரியான குறி என்று வீசினான் தன் கைவேலை வேழத்தின் மீது. பின் மறுபுறத்தில் தன் பார்வையைத் திருப்பினான். அங்கேயும் ஒரு மத்தகம் அவனை நோக்கி விரைந்து வந்துகொண்டிருந்தது. பாழ்பட்ட வாழ்வு கிடைத்து விடும்போலிருக்கிறதே, அவனுக்கு. படை ஒன்றுமில்லையே, பதிலுக்குத் தாக்க. மருட்சியுடன் தன்னைச் சுற்றிப் பார்த்தான். இது வரை எதிரில் குத்தியிருந்த பார்வை சற்று கீழே இறங்கிச் சுற்றிச் சுழன்றது. என்ன விந்தை! அவன் உடம்பிலேயே ஒரு வேல் தொங்கிக்கொண்டிருக்கிறதே. இதோ! அதையே எடுத்துவிட்டான். வீசுகிறான், விரைந்து வருகிற வேழத்தின்மீது. உடம்பிலே குத்தியிருந்த வேலைக் கண்டதும் அவன் முகம் மலர்ந்ததையும், அதற்கு மூலமாக உள்ளத்திலே எழுந்த வீர வுணர்ச்சியையும் நீங்கள் அறிவீர்களா? அதைத்தான் எப்படிச் சொல்வது! இப்படி நமக்கு அறிமுகம் அந்தத் திருக்குறள் வீரன். அவன் தம்பி ஒருவனை இங்கே பார்!

இவனிடமிருந்த அம்புகளெல்லாம் தீர்ந்துவிட்டன. ஆனால் எதிரியின் அம்பு இவனை நோக்கி விரைகின்றது. கண்ணுக்கெதிரே, கடைசி மூச்சைத் தரும் கருவி! கலக்கம்தான் அவன் அறியாததே! தனது வில்லையே ஒரு கையால் சுழற்றுகின்றான். சுழலும் வில், உயிரைச் சூறையாட விரையும் அம்பைத் தடுக்கிறது. அதே போது மறுகை, அவன் மார்பில் முன்பே பதிந்து குருதி முழுக்கு முழுகிக் கிடந்த ஓர் அம்பை எடுத்து வில்லில் ஒல்லென ஏற்றி விண்ணெனத் தெறிக்கவிடுகிறது. வேலைப் பறித்தெறிந்தான் குறள் வீரன்; அம்பைப் பறித்துத் தொடுத்தான் பரணி வீரன். இந்தப் பாட்டைக் கேளேன். இது 436-வது பாட்டு. கலிங்கத்துப் பரணியில்

'நேர்முனையில் தொடுத்த
பகழிகள்
நேர்வளைவில் சுழற்று
பளவினில்
மார்பிடையில் குளித்த
பகழியை
வார்சிலையில் தொடுத்து
விடுவரே!

இவர்களை என்ன என்று கூறுவது! தம் கையிலிருந்த போர்க்கருவிகளை எல்லாம், மாற்றார் மீதும் அவர் தம் மாக்கள் மீதும் எறிந்து வெறுங் கையராகிவிட்டனர். "வேல் கொண்டவர் இவர்; வெறுங்கையர் இவர்!" என்ற வேறுபாடு, பாயுங் குதிரைகளுக்கா தெரியப் போகின்றது. ஆள் இல்லாமல் அலமந்து அங்கும் இங்கும் ஓடித் தென்பட்டவர் மீது எல்லாம் தாக்க முனைவதல்லவா அவற்றின் பண்பு. படை வீரன் என்ற பெயரிருந்தும் படையில்லாமல் திகைக்கும் அன்னார் நிலை அறியாது பாய்ந்து வரும் குதிரையைத் தாக்கச் சிலருக்குத் திடீர் எண்ணம் ஒன்று உண்டாயிற்று. அவர்கள் முன்னே யானைகளைக் கொல்ல வேலும் ஆழியும் ஈட்டியும் இன்னபிறவும் எறிந்தனர். நெற்றியிலே அவை பட்டுப் பதிந்ததும், பட்டு வீழ்ந்தன அந்த யானைகள். அவை இப்போது அவர்களுக்குப் பெருஞ் சொத்தாகத் தோன்றின. வல்லவனுக்குப் புல்லும் கருவியாகுமே! விரைவாக அவற்றைப் பறித்தெடுத்து, மிரண்டு வரும் குதிரைகள் மீது எறிகின்றனர். நிலை கெட்டுத் திரிந்த அவை, நிலத்தில் வீழ்கின்றன. என்ன வீரம்!

இந்த வீரனைப் பாரேன்; இரண்டு தொடைகளையும் வெட்டி விட்டார்கள் எதிரிகள். ஆனாலும் அவன் வீரம் குன்றவில்லை; குறையவில்லை. எதிரே வரும் யானையைத் தாக்க நினைக்கிறான். தனது கடைசி மூச்சுள்ளவரை நாட்டுக்குப் போராடும் நாட்டம் கொண்டவன் அவன். வெள்ளிக் கிண்ணத்தை நசுக்கிவிட்டாலும் அதன் பொருள் மதிப்புக் கெடுவதில்லையே. தாக்கப்பட்டு உடல் தளர்ந்தாலும் உள உரம் குன்றாதவர்களும் அப்படித்தான். அவன் தன் எதிரிலேயே கிடக்கும் தனது இரு தொடைகளில் ஒன்றையெடுத்து, வலிவுடன் சுழற்றி எறிகிறான். மற்றொன்றை எடுத்துத் தன் கையருகிலேயே முன்னேற்பாடாக வைத்துக் கொள்கிறான், மேலும் யானைகள் வந்தால் எறிய.

தம்பி! பரணியும் குறளும் காட்டிய வீரர்களைப் பார்த்தாயே. இப்பொழுது இந்த ஆங்கில வீரனைப் பார், உளக் கண்ணால்.

வானெட்ட எங்கும் தூசிப் படலம் விரிந்து பரந்து எழுகிறது. அந்தத் தூசிப் படலத்திற்குக கீழும் இடையிலும் கொடிய போர்! எளிய போர் அல்ல; நூற்றுக்கணக்கான வீரர்களின் குருதி, ஆற்றுப் பெருக்காக ஓடுகிறது. தங்கள் வெறிக் கால்கள் பட்டதால் களங்கமடைந்த இடத்தைக் கழுவத்தான் அவர்கள் குருதி கொட்டுகிறார்கள். போரின் வேகத்தில் அலைப்புண்டு அங்கும் இங்கும் சிதறுகிறது வீரர் கூட்டம். வாளின் தாக்குதலாலும், வேலின் பாய்ச்சலாலும், அம்பு செய்த தொல்லையாலும் எழும் அலறல்களும் முனகல்களும் காயம்பட்டோர் கூறும வஞ்சினங்களும் களமெங்கும் எதிரொலித்தன. கத்திகள் கத்திகளோடும் கேடயங்களோடும் மோத எழும் ஒலியோ, அளப்பரிது. விநாடிக்கு விநாடி

— 6 ம் பக்கம் —

சிவஞானத் தார்க்கு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சிறப்புமிக்க நிகழ்ச்சிகளைப்பற்றியும், மார்ஞர்தம் அணிவகுப்பிலே ஏற்பட்டுள்ள அதிர்ச்சிகளைப்பற்றியும் நம் இயக்கப் பேச்சாளர் ஒருவருடன் உரையாடிக்கொண்டிருந்தபோது "தமிழரசுக்கழகத்திற்காக நாம் செலவிடும் நேரமும் எழுத்தும் பேச்சும் வீணாகின்றன. வேறு காரியத்திற்காகப் பயன்படுத்தினால் நல்லது" என்று அழகுபடக் கூறினார்கள். தமிழரசுக் கழகத் தலைவர் என்பவர் எழுதுகின்ற கட்டுரைகளைக் காணும்போது அவருடைய பரிதாப நிலைமையை எண்ணி யெண்ணி அனுதாபப்பட வேண்டியுள்ளது. கழகத்தின் செயல் முறைகளில் எந்தத் துறையினும் போட்டியிடத் தகுதியற்றவர்கள ஆய்வுரைகள் தருவதைத் தங்களது தொழிலாக்கிக் கொண்டுவிட்டார்கள். இருசப்பத் தலைவர் "அண்ணாதுரையாரே, பிரிவினையைக் கைவிடுக!" என்று அற்புதமான விளக்கத்தை—தனது அறியாமை விலாசத்தை விரிவாகத் தெரிவிக்கும் தன்மையில் தந்துவிட்டார்! வீழ்ந்துவிட்ட தமிழகம், இந்த வீரனைத்தான் வழிகாட்டியாகக் கொண்டுள்ளது என்கிறார்கள். இது உண்மையானால் ஏன் இவர் அந்த வேலையைக் கவனிக்காமல் அறிஞர் அண்ணா அவர்கள்மீது அவதூறு மொழிகளைத் தருவதைத் தன் கடமையாகக் கொண்டுவிட்டார்! சிலம்புச் சீடர்களிலே சிலர் முன்னேற்றக் கழகத்தை ஏசிப் பேசுவதற்காகவே இப்போதுதான் எழுதப் பழகிக்கொண்டிருக்கிறார்கள்! ஆனால் அவர்களுக்கெல்லாம் அறிவுரைகள் வழங்கவேண்டிய ம. பொ. சி. அவர்கள் அண்ணாவுக்கு அறைகூவல் விடுக்கிறார்! அண்ணா அவர்கள் விளக்கம் சொல்ல வேண்டிய அளவுக்கு விவேகம் நிறைந்த வினாக்களை சிவஞானத்திடமிருந்து எதிர்பார்க்கமுடியாது! எனவே 'கலை வளர்க்கும் சிலப்பதிகாரத் தலைவரை' மீண்டும் எடை போட்டுக் காட்டும் வாய்புக் கிட்டியது. தங்களையும் தங்கள் தலைவரையும் எழுத்துத் திரை போட்டு மறைக்கமுடியாத தொண்டர்கள் காணட்டும்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளிலே அறிஞர் அண்ணா அவநம்பிக்கை தோன்றிவிட்டதாம! அண்ணாவின் மதுரைப் பேச்சினையும், கழகம் துவங்கிய காலத்திலிருந்து இன்றுவரையும் சொல்லி வரும் கருத்துக்களையும் கண்டிருக்கிற சிவஞானசிகாமணிகள் இதனைச் சொல்வதற்குத் தருகின்ற காரண காரிய விளக்கம் எதுவுமில்லை! இந்திய சீன எல்லைத் தகராறு முற்றி அது யுத்தமாக மாறினால் டில்லியின் நச்சுக்கண் முன்னேற்றக் கழகத்தின் மீது விழக்கூடுமென்று அண்ணா அச்சப்படுகிறாராம்! வடவர் சர்க்காரின் திமிரான செயல்களை எதிர்த்துக் கேட்கும் சிறப்பு மிக்க ஆற்றல் முன்னேற்றக் கழகத்திற்கு மட்டுமே உண்டு. கழகத்தின் வளர்ச்சியை டில்லி பீடத்தவர்கள் அடக்கி ஒடுக்கிவிடுவார்கள் என்ற அச்சம் வருவதற்கு அவசியமில்லை! இந்திய சீன எல்லை பற்றி எந்த நடவடிக்கை எடுத்தாலும்-அது முன்னேற்றக் கழகத்தைப் பாதிக்கும் வகையில் அமைந்தாலும் அடக்குமுறைக்குக் கழகம் இரையாகுமே தவிர தனி நாட்டுக் கோரிக்கையை விட்டுப் பணிந்திடப் போவதில்லை இதனைப் புரியாத சிவஞானங்கள் இனியாவது புரிந்து கொள்வது அவர்களுக்கும் அரசியல் உணர்வும் எதிர்கால கணிப்பும் உண்டென்பதைச் சிலராவது தெரிந்துகொள்ள ஏதுவாகும்! நேருவுக்குக் கூஜாத் தூக்கும் சிவஞானத்தார்களும் சில்லரை வீரர்களும் அண்ணாவையும் அதே வகையில் எண்ணுவது மடமைக்கோர் எடுத்துக்காட்டு என்று சொன்னால் அவர்களும் ஒப்புக்கொள்ளவே செய்வர். தமிழரசுக் கழகத்தாரின் சுயாட்சிப் பிரச்சாரத்தினால் பிரிவினைக் கோரிக்கையை விட்டுப் பின்வாங்குவதாகவும் தன்னைத்தானே கற்பனையிலே கண்டு புகழ்ந்துகொள்கிறார்! மற்ற அரசியல் கட்சிக்காரர்கள் எவரும் சொல்லாத காரணத்தை இவர் மட்டுமே சொல்கிறார். தமிழ்நாட்டு அரசியலுக்கும் சிவஞானத்திற்கும் உள்ள செல்வாக்கு எந்த வகையானது என்பதை அரசியல் அரிச்சுவடி அரைகுறையாகக் கற்றவரும் அறிவர். ஆனால் அப்பாவிச் சிவஞானம் புதிய பிளேட்டோவாக மாறிக்கொண்டு வார்த்தைகளை அடுக்கிக் காட்டுகிறார். இவர்களையும் தங்களது "உடன் பிறந்தார்கள்" என்று சொல்லிக்கொள்ளத் தொண்டர்கள் இருப்பதுதான் வியப்பாக உள்ளது

திராவிட முன்னேற்றக் கழகத்தின் திட்டங்களையும் இலட்சிய வடிவான பிரிவினைக் கோரிக்கைகளையும் எத்தனையோ அடக்குமுறை ஆதிக்க வெறி நிறைந்த தாக்குதலுக்கிடையே தான் வளர்த்திருக்கிறோம். பத்தாண்டுகளுக்குப் பிறகு, அடக்குமுறை அம்புகளாலே தாக்கப்பட்டு விடுவோம் என்ற பயம் கழகத்திலே எவருக்கும் இல்லை. தேர்தல் என்றால் கழுத்திலே கை கொடுத்து வெளியிலே தள்ளிய காங்கிரசுக்காரர்களின் கால் பிடித்துச் சேவை செய்வதுதான் தமிழரசுக் கழகத்திற்குத் தலைவர் தந்துள்ள வேலை. தேர்தல் அறிக்கைகளைப்பற்றியெல்லாம் கவலைப்படுவதில்லை அப்போது. ஆனால் இப்போது சொல்கிறார் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் பிரகடன விளக்கத்தில் பிரிவினைக் கொள்கையை அண்ணா விட்டுவிட்டாராம். தேர்தல் நேரத்திலே கூப்பிட்டோர் பின் சென்று கூலிக்கு வாய் திறந்தோரின் தலைவர் சிவஞானம் கழகத்தின் தேர்தல் அறிக்கையைப் படித்துப் பார்க்காமலேயே எழுதியிருக்கிறார்! தேர்தலைப்பற்றியும் தேர்தல் அறிக்கைகளைப்பற்றியும் பேச வேண்டிய தகுதியும் பண்பும் இவர்களுக்குண்டா? திராவிட நாட்டுப் பிரிவினைக் கொள்கையை முறியடிக்கும் வலுப்பெற்ற சுயாட்சிக் கழகம் தேர்தலில் தன்னிடம்போட்டியிட்டுச் சமாளிக்க முடியாதவர்களின் பட்டியலைக் காட்டியதுண்டா? கூலிக்கு வேலை செய்த வேளையிலாவது முன்னேற்றக் கழகத்தின் வெற்றியைத் தடுக்கமுடிந்ததா? பிரிவினையின் தேவையும் கூட்டாட்சியின் அவசியமும் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் மறக்கப்படவில்லை—மறைக்கப்படவில்லை என்பதைக் கொஞ்சம் சொந்தப் புத்தியோடு கணக்கிட்டுப் பார்த்தால் சன்னக்கோலர்களுக்கும் புரியக்கூடும்! புரிந்துகொண்டாலும் ஏற்றுக்கொள்ளத் தெரியாது. தெரிந்துகொண்டாலும் முன்னேற்றக் கழகத்தை எதிர்க்க வேண்டும் – ஏசவேண்டும் என்ற வெறி ஏற்றுக்கொள்ள விடாது! தலைவர் தத்தளிக்கிறார்; தடுமாறுகிறார்; அவரின் நிலைக்கேற்பத் தொண்டர்களும் ஆடுகிறார்கள்; பாடுகிறார்கள்; பங்கப்படுகிறார்கள்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் திராவிட நாட்டுப் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட வேண்டுமாம்! "திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைப்பு விதிகளும் கொள்கைக் கணிப்புகளும் எவ்வளவு உறுதியானவை எப்படியெப்படி உருவாக்கப்பட்டு வளர்க்கப்படுகின்றன என்பதைத் தெரிந்துகொள்ளாமல் இந்தச் சிவஞான சாம்பிராணியார் என்பவர் இருக்கிறாரே!" என்ற கருத்தைத்தான் அவருடைய கட்டுரைத் தலைப்பு அறிவிக்கிறது. அண்ணா அவர்களே பலமுறை சொல்லியிருக்கிறார்கள் "நான் நினைத்தால்கூட—

கூடலரசன்

விரும்பினால்கூட—கழகத்தின் இலட்சியத்தை மாற்றிவிட முடியாது" என்பதாக! உருவம் தெரியாத சுயாட்சிக்கே உயிரைத் தருகின்ற சிவஞானங்கள், சிப்பியேந்திய சில்லரைச் செய்திகளையெல்லாம் சொல்லிச் சொல்லிப் பிழைத்துக்கொண்டிருப்பவர்கள், பிரிவினைக் கொள்கையை உடனே விட்டுவிட வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கும் ஆணவம் பெற்றுள்ளார்கள்! நல்லறிவாளர்கள் இதனை அரசியல் தரக்குறைவென்பார்கள்; சிவஞானங்கள் சிந்தனைக்குச் சிறிது நேரமாவது வேலை கொடுத்தால் இதனைச் சுலபமாகப் புரிந்துகொள்ளலாம்! பிரிவினைக் கொள்கை இருண்ட வீடு என்றால், அதற்குத் தமிழ்நாட்டில் ஆதரவேயில்லையென்றால் சித்தத்திலே பித்தம் நிறைந்த சிவஞான சிகாமணிகள் 'பிரிவினையைக் கைவிடுக' என் அண்ணாவின் தாள் பணிந்து வேண்டுவது ஏன்? அவருடைய 'சுயாட்சியை' சுகஆட்சிக் கொள்கையென்று எவரும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை, எதிர்க்கட்சிகள் இந்தச் சுயவிளம்பரச் செய்தியை யோசிக்க வேண்டிய ஒன்றாகவே மதிக்கவில்லை. ஏதோ எதிர்பார்த்துக் கிடைக்காமல் அல்லல் படும் சிவஞானத்தார் வேதனைச் சிந்து பாடுகிறார் என்றுதான் எண்ணியிருக்கிறார்கள்! தான் அனுபவிக்கும் வேதனையைத்தான் முன்னேற்றக் கழகத் தலைவரைப் பழிப்பதன்மூலம் குறைத்துக்கொள்ளத் துணிந்திருக்கிறார்! எத்தனை நாளுக்கோ இந்த வாழ்வு?

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரையும் தம்பிகளையும் தீர்க்க தரிசனம் இல்லாதவர்கள்; அரசியல் அறியாதவர்கள் என்று துணிந்து சொல்லும் திறமை தனக்கில்லை என்று ஒப்புக்கொண்டவர் போலவே, அண்ணாவையும் கழகத் தோழர்களையும் மதிப்பிட்டுள்ளார். இப்போதாவது தன் தரக்குறைவை மறுக்காமல் விட்டாரே என்பதற்காக அவர் பாராட்டப்பட வேண்டியவரே! பரம்பரை அச்சுத் தொழிலாளிக்கு அடிக்கடி அறிஞர் அண்ணாவின் எம். ஏ., பட்டமும் நினைவுக்கு வருகிறது. "எம். ஏ., படித்தவர் இப்படிப் பேசலாமா?" என்று கேட்டும் வைக்கிறார்! அண்ணா அவர்கள் தனக்குள்ள எம். ஏ., பட்டத்தினாலே பல்கலைக் கழகத்திற்கும் பாடம் கற்பித்த பேராசிரியர்களுக்கும் புகழ் தேடித் தந்துகொண்டிருக்கிறார்! சிவஞானம் மரமேறியிறங்கியிருக்கலாம்; அண்ணா பல்கலைக்கழகப் படியேறி இறங்கியிருக்கிறார். அவர் எம். ஏ. படித்திருக்கிறாரே என்று சண்டித்தனத்திலேயே எத்திப் பிழைக்கும் எடுபிடிகள் கூடச் சொல்லமாட்டார்கள்! ஆனால், சிவஞானத்தார்களே! சந்துமுனைச் சிந்துக்காரர்களே! உங்கள் எண்ணமும் எழுத்தும் ஏன், அறிவுலகம் தந்துள்ள 'கலைத்தலைவன்' என்ற விருதினைக் குறைத்து மதிப்பிட வேண்டும்! தவறிப்போய் மூன்றாம் வகுப்புப் படித்ததால் 'கைநாட்டுச் சிவஞானம்' என்ற பட்டம் கிடைக்கவில்லை. இதற்காக வெட்கப்பட்டிருந்தால் உள்ளத்திலே வேதனை பிறந்துவிட்டதென்று நம்பமுடியும்! சொந்தப் புத்தி சோரம் போனதென்றால் பிறரென்ன செய்ய முடியும்

— 7-ம் பக்கம் —

என் தாய்

★

எழுத்தாள நண்பர்கள், தமது தாயைப்பற்றி வசன கவிதையாகவோ கவிதையாகவோ எழுதி அனுப்பலாம். அது வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பதாகவோ, பொதுவான பெருமைகளைச் சொல்வதாகவோ இருக்க வேண்டும். கவிதையாக இருந்தால் 32 வரிகளிலும் வசன காவியமாக இருந்தால் 62 வரிகளிலும் அமையட்டும். தாயார் மட்டும் இருக்கும் இடுப்பளவு புகைப்படத்தை உடன் அனுப்பி வைக்க வேண்டும். அப்படங்கள் "கார்ட்" அளவில் இருத்தல் நலம்.

—கண்ணதாசன்

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

கண்ணதாசன்

மலர் 6 ‖ 19-12-'59 ‖ இதழ் 27

கண்ணீர்.

★

தமிழ்மகள் உறங்கத் தான் விழித்திருந்து
இமையசை யாதொரு பகையணு காமற்
காத்திருந் தானுயிர் காற்றெடும் போயது!

ஃ ஃ ஃ

ஆற்றெழுக் காயசெந் தேன்தமிழ் ஊற்றி
அற்றையப் புகழ்நிலம் பிற்றைய நாளிலும்
மாற்றலர் கைகளில் மாண்டொழி யாவணம்
காத்திருந் தானுயிர் காற்றெனப் போயது.

ஃ ஃ ஃ

"சாத்தனும் மாய்ந்தபின் பூத்தியோ முல்லை" யென்(று)
ஆற்றுகி லானுய் அழுதவன் துயரினும்
நாத்திறல் மறவன் தீப்படுக் கைகொளப்
பார்த்தவன் துயர்க்குரல் பன்மடங் காயது!

ஃ ஃ ஃ

எம்மரு மன்னனைஇப் புதல்வனை உயிர்த்ததும்
தம்மருங் குலத்தவர் தமக்கென வளர்த்ததும்
செம்மொழி படைத்ததும் திறத்தொடு காத்ததும்
மும்முடி சூட்டிமெய்முத நிலை கொடுத்ததும்
கொள்முதல் குவித்ததும் கொடுமுதல் வளர்த்ததும்
உள்ளுவ யாவினும் உயர்வினை வைத்ததும்
வெள்ளலைக் கண்களில் செவ்வலை சேர்த்ததும்
சொல்லொடுங் கனல்வரும் துடிப்பினைத் தந்ததும்
பின்னொரு புலவரும் பெற்றிலாப் பெற்றியே!

ஃ ஃ ஃ

பாரதிர்ந் தெழுந்து யார்யாரெனக் கேட்குமா(று)
ஊரெழுந் தோடிஎம் உயிரெனக் கூறுமா(று)
ஏறெழுந் தன்னஎம் பாரதிஎழுந்து சொல்
மாரிபெய்வான், புனல்மாரி பெய்வான் என!
மாத மும்மாரி இம்மண்ணிடைப் பொய்ப்பினும்
நாத மும்மாரிந டாத்துவான் பாரதி!
தூது வந்துற்றதோ? தூமணிப் பாவலன்
ஓது செந்தமிழ்ச்சுவை உலகெலாம் கேட்டதோ?
மாண்டவர் உளமதை மாந்திடத் துடித்ததோ?
தாயழப் "பாரதித்தமிழ" ழப் போயினன்!
போயவன் தந்தநற் பொருளெலாம் காப்பதும்
தூயவன் வாழ்க்கையின் துணிவினைப் பெறுவதும்
தாய்த்தமிழ் காப்பதும் தலைமுறைக் கடனென
யாமறிந் தவ்வழி போய்ப்புகழ் சூடுவம்!

ஃ ஃ ஃ

நாவலன் காலடி நரிவிழும் கோலடி!
சோமனின் காலடி சூழ்ச்சிக்கு நாலடி!
சுந்தரன் காலடி இந்திக்கு வேலடி!
பாரதி காலடி பண்புக்குச் சேவடி!

வாழிய பாரதி புகழ்!

நினைவு கொள்வோம்
நினைவில் நீங்காதான் மொழிகளை:

தனித் தமிழ்

"புதிய கருத்துக்கள் எழுங்கால் பழைய மொழிப் பாத்திகளில் அம்மொழியின் அரிய உரிச்சொல் முளையைத் திரித்தாற்றி விளை நாற்றை மாற்றி நட்டுப் புதிய வகைச் சொல்லாக்கல் ஒரு முறை. அக்கருத்தைப் பிற மொழியாரிடமிருந்து கொள்ள நேரின் அவர் மொழியில் அதற்குரிய சொல்லோடு ஏற்பதுவும் தவறாகா; இழிவுமன்று. ஆனால் எக்கருத்தும் அதற்கேற்பக் கொள்ளுபவர் மொழி முளையாம் உரியடியை விதை முதலாகக் கொண்டு உரத்தாலும் ஒட்டாலும் திருத்தமுறச் சொற்புனைய உதவுவது மொழி இயலில் அமைந்த உண்மை

பல மொழி நூல் பயின்று அவற்றை ஒப்பு நோக்கி ஆராய்ந்து அளந்தறிந்த பெரும்புலவர், கால்டுவெல் ஐயர் எல்லிசறிஞர், வீரமாமுனிவர், போப்பையர் போல்வாரும் தமிழ் தனித்தியங்க வல்ல நல்ல செம்மொழி எனத் துணிந்து கூறுகிறார். தமிழர் எனப் பேசுபவர் சிலரதனை அறியாமல் பேசுவது வியப்பன்றோ. அவர்க்கதனில் ஐயம் எழ நேர்ந்ததேனோ? தமது பழி மறைப்பதற்கோ, தணியாத தமதடிமை மோக வெறி மறைப்பாலோ அல்லாமல், பிரிதேது காணலரிது."

பெண்மை

" ..சான்றாமை மலர் பிஞ்சாய்க் காய் காழ்த்து, அதிற் பழுக்கும் நறுங்கனியே பெண்மை. .

'பெண்மையை அன்பின் திண்மையெனல் தவறாகாது. காழ்த்து முதிர்ந்த கனிச் சுவைபோல் வளமலிந்த அன்பின் பழரசமே பெண்மையாகும். தானும் இனித்து தவித்தன் காழல் பழ மரங்கள் வித்தி வருங் கனியேபோல் 'பெண்மை' தானும் காதலித்து, தம் வீழ்வார் தம்மிடையும் அக்காதற் கனியைக் கனிவித்து ஒளிரும் ஒரு கற்பக மரம். யாண்டும் கனிவிக்கும் ஒட்பமும், வேண்டுழி காழுதவும் திட்பமும் ஒருங்கமைந்த சான்றாண்மைத் தருவில் வரு தலைக்கனியே பெண்மை எனலாம்."

அழகு

"ஐம்பொறி நுகர்வுக்கு இலக்காய்ப் புலன் உணர்வைப் புனிதமோடு இனிமைப்படுத்துவ தனைத்தும் அழகேயாம். 'கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும்' ஐம்புலன் சுவைக்கும் அழகனைத்தும் பண்பாமேனும், பண்பிகளைப் பற்றியன்றிப் பொறி நுகரும் அழகொன்றில்லை."

நினைவில் நீக்கமுடியாதார்
நெஞ்சமொழி :

"இன்றையத் தமிழகத்தின் முது பெரும்புலவர்களில் முதல்வராக வைத்து எண்ணப்பட்டும் பாராட்டப்பட்டும் வந்தவரும், நாவீறு படைத்த நாவலர் என்று தமிழ்ப் பெருங்குடி மக்களால் போற்றப்பட்டு வந்தவரும் ஆன பேரறிஞர் ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள் இயற்கை எய்திய துக்கச் செய்தி கேட்டு ஆற்றொணாத் துயருற்றேன்.

"அவரது இழப்பு தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பேயாகும். நாவலர் பாரதியார் அவர்களின் மறைவால் தமிழ்கூறு நல்லுலகம் ஒரு தமிழ்ப் பெரும்புலவரை - ஒரு பெருந்தமிழ்ப் பேராசிரியரை, நாவீறு படைத்த ஒரு பெருஞ் சொற்பொழிவாளரை, அஞ்சாநெஞ்சத்துடன் உண்மைக்காக வாதாடும் ஒரு பெரும் வழக்கறிஞரை, தாய்மொழிக்காகவும் தாய்நாட்டுக்காகவும் பாடுபட்ட ஒரு பெரும் விடுதலை வீரரை இழந்தது என்றுதான் சொல்லவேண்டும்.

"அவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக இருந்து ஆற்றிய அரும்பணிகளும், இந்தியத் துணைக்கண்ட விடுதலைப் போராட்டக் கிளர்ச்சிகளில் ஈடுபட்டுச் செய்த தொண்டுகளும், நல்ல தமிழ் மணங்கமழுமாறு எழுதித் தந்துள்ள இலக்கிய நூல்களும், அவர் ஆற்றிய ஆணித்தரமான வீரஞ்செறிந்த சொற்பொழிவுகளும், தாய்மொழி தமிழைக் காக்க இந்திமொழி ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடிய திறனும், தமிழர்க்குப் பகையானவர்களை எதிர்த்து நின்ற வீரமும் யாராலும் மறக்கக்கூடியன அல்லவாகும்.

"அவரது தோற்றம் - கருத்து - எழுத்து - சொல்-செயல் ஆகிய எல்லாம் வீரஞ்செறிந்தனவாகும்.

"இப்படிப்பட்ட நாவலர் பாரதியாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினர்க்கும், உற்றார் உறவினர் நண்பர்களுக்கும், தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆழ்ந்த பரிவைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

சென்னை
15-12-'59

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்.

கண்ணதாசன் பதில் தருகிறார்

கடந்த கிழமை இதழில் (5-12-59) "காதல்"பற்றி எழுதியுள்ளீர்கள். அஃதில் ஓர் இடத்தில் 'இளமையில் வருவது காதலல்ல' என்று கூறியுள்ளீர்கள். இலக்கியத்திலிருந்து முழுக்க முழுக்க விலகி உங்கள் கருத்தைக் கூறியுள்ளீர்கள். துணிவுக்குப் பாராட்டினுலும் அதே ஏட்டில் "தினகரன்" வாசகர் வினுவொன்றிற்கு விடை கூறும் போது "உடல், உள்ளம் இரண்டையும், ஆட்கொள்ளும் திறன் காதல்" என்று கூறியிருக்கிறீர்கள்.

இவ்விடத்தில்தான் ஒரு சிறிதே "ஐயம்" எழுகிறது. "உடல்" என்று நீங்கள் கூறியிருப்பது உறுதியாய் "மணம்" ஆவதற்கு முன் உள்ள நிலையைத்தான் என்று எண்ணுகிறேன். காரணம் அந்த நிலைதான் களங்கமற்ற நிலை. "உள்ளம்" என்பது எப்படியோ "பிற்பட்ட" காதலுக்குச் சென்று விடுகிறது. அஃதாவது முப்பது வயதுக்குமேற்பட்ட காதலாகிவிடுகிறது. வினுவுக்கு விடையிறுக்கும் போது மாறுபட்ட ஒரு கருத்தும், 'காதல்'-பொருள் எடுத்துக்கொண்டு கூறும்போது மற்றெரு கருத்தும் கூறியிருக்கிறீர்கள் எண்ணிப் பார்ப்பின், ஏனைய கிழமை யிதழ்களில் எழுதியுள்ள பொருள்'களில் இது சிறிது விளக்கமற்றதாகவே காண்கிறது. என் எண்ணம் தவரு?

—'இளம் விழியன்', கணபதி.

பதில்: ஐயப்பாடு நியாயமானதே. நண்பரின் குறிப்பிலிருந்து தெளிவுபடுத்தும் முறையில்தான் நான் எழுதியிருக்கிறேன் என்பது தெரிய வருகிறது. வினு விடைக் கொள்கையிலிருந்து, தத்துவக் கட்டுரையில் நான் முரண்படவில்லை. இளமைக் காதல் உடலைமட்டுமே ஆட்கொள்கிறது. நடுப் பருவக் காதல் உடல், உள்ளம் இரண்டையும் சம அளவுக்கு ஆட்கொள்ளுகிறது. இளம் பருவக் காதலில் உள்ளத் தெளிவு இல்லாத காரணத்தால், அது உள்ளத்தை ஆட்கொள்ளுவதே இல்லை என்று நான் கருதுகிறேன். உடலை மட்டும் ஈர்ப்பதால் அது காதலல்ல; பசி என்று கணக்கிடுகிறேன். முழுக்க முழுக்க, உள்ளத்தையும் உடலையும் சம அளவுக்கு ஆட்கொள்ளுவது நடுப்பருவத்தில் தான். நடுப்பருவத்தில் உடல் வெறுப்படைவதாக நான் கூறவில்லை. ஆகவே கொள்கை அளவில் நான் முரண்படுவதாகக் கருதவில்லை.

★

சென்னை, 16-12 '59.

ஐயா,

"முல்லை" இதழில் தாங்கள் எழுதியுள்ள "நான்" என்னும் தத்துவக் கட்டுரையை நான் படித்தேன். அதில் "நான் தலைவனுக இருக்க முடியாது" என்று கூறியுள்ளீர்கள். ஆனுல் ஒரு வினு-விடையில் "எல்லோருக்கும் நான் தலைவனுக இருக்க ஆசைப்படுகிறேன். ஆனுல் ஆயுள்காலம் முழுவதும் அறிஞர் அண்ணு அவர்களுக்குத் தொண்டனுக இருக்க ஆசைப்படுகிறேன்" எனறு கூறியுள்ளீர்கள். ஏன் இந்த முரண்பாடு?

—இராம. துரை அரங்கன்.

பதில்: நண்பர் கட்டுரையை மீண்டும் படித்துப் பார்க்கவேண்டும். "யாராவது தங்களுடைய நான் தன்மை முழுவதும் திரண்டு என் வடிவில் இருப்பதாகக் கருதினுல், அவர்கள் என்னைத் தலைவன் என்று அழைக்கலாம்" என்று கூறியுள்ளேன். எல்லோரும் அப்படி நினைக்கவேண்டுமென்றுதான் நான் ஆசைப்படுவதாகக் கொள்ள முடியும். என்னுடைய நான் தன்மை முழுவதும் திரண்டு, ஒரு வடிவில் நிற்பதாக நான் கருதுகிறேன. அவரை என் ஆயுள்காலம் முழுவதும் என் தலைவர் எனறே அழைப்பேன். அவர்தான் அறிஞர் அண்ணு. மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். மீண்டும் முல்லையைப் படித்துப் பாருங்கள்.

திருத்தம்

கடந்த இதழில், "துணிச்ச"லில் இரண்டாவது காலத்தில், பத்தாவது பாராவுக்கு அடுத்து, "அடுத்த தலைமுறைக்காரன் படகு செய்தான்" என்பதாக ஒரு வாக்கியத்தைச் சேர்த்துக் கொள்ளுங்கள்.

கடந்த இதழ் "எண்ண"த்தில் ஏழாவது பாராவின் முதல் வாக்கியம் "நாடோடிகளால் எழுந்ததுதான் அமெரிக்காக் கண்டம" என்றிருக்க வேண்டும். தவறுகட்கு மன்னியுங்கள்.

★

நண்பர்கட்கு...

"நோய்"பெற்ற குறள்கள் இடமின்மையால், அடுதத இதழில் இடம் பெறுகின்றன.

மலர் பற்றி

கருத்துக் கருவூலம்!
கவிதை மலர்க் காடு!!
கதைக் கரும்புத் தோட்டம்!!!

"தென்றல்"
பொங்கல் மலர் 1960.

கண்ணதாசன்
எழுதும்
"கல்லறை"

அறிஞர்களின் ஆராய்ச்சிகள்!
அற்புதமான சிறுகதைகள்!
அகங்கவரும் கவிதைகள்!
அசிரியர் கண்ணதாசனின்
வினு விடை நூறு!

விலை ரூபாய் இரண்டு.

★

விற்பனையாளர்களுக்கு

★

"தென்றல் பொங்கல் மலர்" தேவையான பிரதிகளுக்கு கமிஷன் அணு 8 நீக்கி பிரதி ஒன்றுக்கு ரு. 1-8-0 வீதம் பூராத் தொகையும் 30-12-59-ம் நாளுக்குள் அனுப்பி வைக்க வேண்டும். முன்பணமின்றிக் கண்டிப்பாக மலர் அனுப்பிவைக்கப் படமாட்டாது. மணியார்டர் கூப்பனில் பொங்கல் மலருக்காக என்று குறிப்பிட்டு எழுதுங்கள். மலர் தேவைக்கு முன்கூட்டியே தெரிவிக்கவும்.

சந்தாதார்கள் கவனிக்கவும்

★

"தென்றல் பொங்கல் மலர்" பெற விரும்பும் சந்தாதார்கள் மலருக்குத் தனியாகப் பணம் அனுப்ப வேண்டும்.

சந்தாதார்களுக்கு மலர் தவருமல் கிடைக்க பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டியிருப்பதால் தபால் செலவு சேர்த்து ரு. 2-55 அனுப்பிவைக்க வேண்டுகிருேம்.

—பொறுப்பாளர்.

★

மடலும் பதிலும்

நண்பர்களே!

கடிதங்களுக்குப் பதில் எழுதமுடியாமல் இருப்பதைப் பத்திரிகையின் வாயிலாகத் தெரிவிப்பதற்கு வருந்துகிறேன். ஓய்வொழிவில்லாத வேலை. ஒவ்வொரு மடலுக்கும் நானே பதில் எழுத ஆசைப்படுகிறேன். கடிதங்கள் எழுதியுள்ள நண்பர்கள் பொறுத்தருள வேண்டுகிறேன். எல்லாக் கிளைக்கழகங்களின் ஆசையையும் கூடுமானவரை நிறைவேற்றி வைக்கத்தான் நான் விரும்புகிறேன்.

அன்புள்ள,

கண்ணதாசன்.

குழந்தை பிறந்தது;
பிறந்ததும் அழுதது;
வளர்ந்தது; வாழ்ந்தது; இறந்தது.
சுற்றியிருந்தவர்களெல்லாம் அழுதார்கள்.
பிறப்பு, தான் அழுதது.
இறப்பு, பிறரை அழவைத்தது.
ஒவ்வொரு அழுகையிலும் உறவுநின்று சிரித்தது.
அழுத குழந்தை தன்னை அணைக்கும் கைகளைப் புரிந்துகொண்டது.
அந்தக் குழந்தையின் வாய்க்கு, பால் வழங்கும் மார்பகம் பிடிபட்டது.
உலகம் தெரியாது. பேசவும் தெரியாது.
அது ஆறுமாதக் குழந்தையானது.
பிறர் தூக்கினால் ஓலமிட்டது.
தாய் தூக்கினால் அமைதிகொண்டது.
நினைவு பிறப்பதற்கு முன்னாலேயே உறவு பிறந்து விட்டது.
அறிவு தெளிவதற்கு முன்னாலேயே உறவு தெரிந்து விட்டது.
பாம்பு கடிக்கும் என்பது தெரியாமல் தொடுகிறது.
தேள் கொட்டும் என்று தெரியாமல் பிடிக்கிறது.
உலகத்தை அறியாமல் தவழ்கிறது.
ஆனால்—
தாயின் கரங்களுக்கும் பிறருடைய கரங்களுக்கும் பேதம் மட்டும் தெரிகிறது.
சிந்திக்கத் தெரியாத கோழிகள் தம் குஞ்சுகளைப் புரிந்துகொள்கின்றன.
பகுத்தறிவில்லாத குரங்குகள் தங்கள் குட்டிகளை மார்பிலே சுமந்துகொள்கின்றன.
தன்னைப் பலி கொடுத்துக் குழந்தைகளைக் காப்பாற்றத் தாயும் தயாராகிறாள்.
பருந்திடமிருந்து குஞ்சுகளைக் காப்பாற்றக் கோழியும் தயாராகிறது.
அறிவிலே மனிதர்கள் உயர்ந்துவிட்டார்கள்.
உறவிலே மிருகங்கள், பறவைகள், மனிதர்கள் எல்லோருமே ஒன்றாக இருக்கிறார்கள்.
சிந்தனைக்குத் தொடர்பில்லாத ஓர் உணர்ச்சி.
குருதி நாளங்களில், மயிர்க்கால்களில் பரவி விரவி நின்றுகொள்கிறதுஉறவு.
"அதோஅந்த வீட்டில் யாரோ செத்துப் போனார்கள்" என்று சொன்னேன். கேட்டவன் "ஐயோ, பாவம்!" என்று சொல்லிவிட்டுத் தன் வழியே போய்க்கொண்டிருந்தான்.
"இறந்தவன் உன் மகன்தானும்" என்றேன். "ஐயோ, அம்மா!" என்று அலறினான். முட்டிக்கொண்டான்; மோதிக்கொண்டான்.
நடைபெற்றது ஒரே சாவுதான்.
யாரோ என்றால் கண்ணீர் வரவில்லை; உறவுஎன்றால் ஓடோடி வருகிறது.
'உன் பிள்ளை பெரியவீரனம்மா' என்றான் ஒருவன். தாயின் உடம்பில் சதைப் பிடிப்பு ஏறிற்று.
ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு தான் பிறப்பு நிகழ்கிறது.
தானாடாவிட்டாலும் சதை ஆடுகிறது.
பிறந்த பிள்ளையால் பிறந்த உறவு தாயை வளர்க்கிறது.
வந்த மனைவியோடு வந்த உறவு கணவனை வளர்க்கிறது.
உறவுகள் இல்லையேல் வாழ்வில் பிடிப்பு இல்லை.
பிடிப்பு இல்லையேல் திட்டங்கள் இல்லை.
திட்டங்கள் இல்லாமல் செயல்படும் மனிதர்கள் அழிவிற்கே காரணமாகிறார்கள்.
சிரிக்கும்போது சிரிக்கும் உறவில் அழுத்தம் இல்லை.
அழும்போது சேர்ந்து அழும் உறவில் நெருக்கம் இருக்கிறது.
வசதியான வாழ்க்கை நெருக்கமான பிணைப்புகளை அறுத்துவிடுகிறது.
தொல்லைகளும் துயரங்களும் ஒரு கைக்கு மறு கையை உரமாக்குகின்றன.
சுமையைத் தாங்கத்தான் சாலைகளில் சுமைதாங்கிகள் இருக்கின்றன.
சுகத்தைத் தாங்க சுகந்தாங்கிகள் இல்லை.
சோறு கிடைத்தால் காக்கை தன் சுற்றத்தையே அழைத்துக்கொண்டு வருகிறது.
இறந்துபோன காக்கையை இருநூறு காக்கைகள் சூழ்ந்துகொள்கின்றன.
தனித்தனி உயிர்களை இணைத்து நிற்கிறது இந்தப் பாலம்.
வயிற்றுக்குப் பசி தெரியும்வரை மனத்துக்கு உறவு தெரிகிறது.
சாகாத உயிர்களை சாகடிக்கும் போர்வீரர்கள் தானாக மாண்ட தாய்தந்தையருக்காகக் கண்ணீர் வடிக்கிறார்கள்.
ஒன்றைக் கொல்லும்போது எக்காளம்; ஒருவர் சாகும்போது துயரம்.
ஒருவர் இறந்தால் ஒரு சமுதாயம் முழுவதுமே கண்ணீர் வடிக்கிற மாதிரி, இந்த உறவு அமையாதா?
நான்கு சுவர்களுக்கு நடுவிலேதானா கண்ணீருக்குப் பொருள் அமையவேண்டும்?
யார் செத்தாலும் எல்லோரும் ஏன் அழக்கூடாது?
பக்கம் பக்கமாக விளையாடும் இரத்தப் பிணைப்பு, ஏன் தன் கைகளை நாடெங்கிலும் பரப்பக்கூடாது?
கண்ணுக்கும் கைகளுக்கும் எட்டுகின்ற தூரத்தில்தானா உறவு விளையாட வேண்டும்?
இயற்கை ஏன் இந்த நியதியைப் படைத்தது?
வயிற்றில் பசியை வைத்தது.
பசிக்குத் தேவையைத் தந்தது.
தேவை தன்னலத்தை வளர்த்தது.
தன்னலம் எல்லைகளைப் படைத்தது.
எல்லை உணர்ச்சிகளையும் தனக்குள் அடக்கிக் கொண்டது.
உணர்ச்சிகளுக்கு ஆட்பட்ட உறவு, ஊரைக்கூடக் கருதாமல் வீட்டுக்குள் முடங்கிவிட்டது.
வீட்டிலிருந்து ஊருக்கும், ஊரிலிருந்து நாட்டுக்கும் உறவு தன் முழுக் கரங்களையும் எப்போது விரிக்கும்?
நாடு முழுவதற்கும் ஒரேமாதிரித் துயரம்...
நாடு முழுவதற்கும் ஒரேமாதிரித் தொல்லை
எல்லோர் கண்களிலும் ஒரேமாதிரிக் கண்ணீர்
சமுதாயம் ஒவ்வொருவரையும் பிணைத்து வைத்து விடுகிறது.
அடிமைப்பட்ட சமுதாயத்தின் ஒற்றுமை சுதந்திர சமுதாயத்துக்கு வராது.
கல்லறையைச் சுற்றி இருதயம் விளையாடுவது போல் கட்டிலறையைச் சுற்றி விளையாடுவதில்லை.
காதலால் விளையும் உறவு பருவங்கொண்ட பயிரைப்போல் அறுவடையாகிவிடுகிறது.
பணத்தால் வரும் உறவு பணம் போகும்போது தானும் போய்விடுகிறது.
செல்வாக்கில் வரும் உறவு செல்வம் தேயும் போது தானும் தேய்ந்துவிடுகிறது.
பிறப்போடு வரும் உறவும் வாழ்க்கை வசதிகள் பெருகினால் சிதைந்துவிடுகிறது.
பாசத்திலும் ஆசையிலும் வரும் உறவுகள் பழுதுபடுவது நடக்கிறது.
ஆனால், அவலத்திலும் ஓலத்திலும் துயரத்திலும் வரும் உறவு தியாகத்தோடு வருகிறது.
பலவீனத்தில் இருக்கும் பிணைப்பு, பலத்தில் இல்லை.
யாருக்காக அழுதாலும் ஆறுதல் இருக்கிறது.
சிரித்துக்கொண்டே வாழ விரும்பும் மனிதர்கள் அழுதுகொண்டே நெருங்கிக்கொள்ள வேண்டும்.
பிறருக்காக அழுகிறவன் கண்ணுக்கு உறவு தெரிகிறது.
பிறந்துவிட்டோமே என்று அழுகிறவன் கண்ணுக்கு துறவு தெரிகிறது.
என் கண்ணுக்கு உறவு தெரிகிறது.

அடுத்த இதழில்...
கண்ணதாசன்—
?

அப்பாவின் வெற்றி நந்தமிழின் வெற்றி

அப்பாத்துரையார் அவர்கள் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் '60-ம் ஆண்டுக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்ற செய்தியை அறிவிப்பதில் "தென்றல்" பெருமகிழ்வு கொள்கிறது.

அந்த மகிழ்ச்சி "தென்ற"லின் ஆசான் வென்றார் என்பதால் மட்டும் எழுந்ததன்று. தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் தமிழ் வென்றது என்பதாலும் கிளைத்தெழுந்ததாகும்.

ஆம்! அப்பாவின் வெற்றி, "ஆண்"டின் வெற்றி; "வருஷ"த்தின் தோல்வி. அப்பாவின் வெற்றி "வணக்கத்தின் வெற்றி; "நமஸ்காரத்"தின் தோல்வி.

தமிழ் எழுத்தாளர் சங்கம் கடல் கடந்தும் தன் புகழைப் பரப்பியிருப்பது ஆகும். தமிழகம், தில்லி, கல்கத்தா, பம்பாய் ஆகியவற்றைக் கடந்தும், கொழும்பு யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும் அதன் உறுப்பினர்கள் வாழ்கின்றனர். இவ்வளவு பரவியுள்ள இப்பெருஞ் சங்கத்தின் அண்மை நாட்கள் தமிழைப் பற்றிப் பேசி ஆயும்நாட்களாய் இருந்தன. "இச்சங்கத்தில் தமிழ் வாழ்வதா? சாவதா?" என்ற அளவுக்கு அப்பிரச்னைகள் உயர்ந்திருந்தன. இந்தச் சூழலில், '60-ம் ஆண்டுக்கு உரிய தலைவரைத் தேர்ந்தெடுக்கும் நாள் வந்தது. "தமிழென்ன தமிழ்?" என்று கேட்டோர்க்கும் "தமிழ் எங்கள் தாய்!" என்று முழக்குவோர்க்கும் நடக்கும் போட்டியாக இத்தேர்தல் அமைந்து விட்டது. தமிழ் எழுத்தாளர்களின் அன்புக்குரியவரும் பல்துறைப் புலமை மிக்கவரும் ஆன அப்பா அவர்கள் தமிழன்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி, இத்தேர்தலில் நின்றார்கள். பலர் சாதியைக் காட்டி வாக்குகளைச் சிதறடிக்க நினைத்தனர். "அப்பாத்துரை அண்ணாத்துரையின் இனம்" என்று பாகுபாடு காட்டிச் சிதறடிக்கவும் முனைந்தனர், பலர். ஆனால் அப்பா அவர்களின் நடுநிலைக் கொள்கையை எல்லோரும் உணர்ந்ததால், "சாதியால்-இனத்தால்-தாம் வேறுபட்டிருப்பினும் அனைவரும் மொழியால் ஒன்றே!' என்று கூறிப் பல தரப்பினரும் அப்பாவுக்கு வாக்களித்தனர். எனவே வென்றார்; அவர் வாழ்த்தும் தமிழன்னை வென்றாள்!

பதவி ஏற்கும் அப்பாவின் முன் பல பொறுப்புக்கள் தலை காட்டுகின்றன. தமிழ் எழுத்தாளர் சங்கத்தை அதன் பெயருக்கேற்பவே நடத்துவதும், பல துறை எழுத்தாளர்களையும் ஒன்று சேர்த்து மொழி நலனைப் பெருக்குவதும் ஆன பல பணிகள் அவர்முன் தலை காட்டுகின்றன. பொறுமையும் ஆற்றலும் சான்ற அப்பா அவற்றை எல்லாம் கடந்து வெல்வார். அவரது பணிகள் நிறைவுறவும் வெற்றி பெறவும் ஒல்லும் வகை எல்லாம் ஒத்துழைப்பது தமிழ் எழுத்தாளர் அனைவரின் கடனுமாகிறது.

அப்பா அவர்களின் வெற்றிக்கு உழைத்த தொண்டர்களையும் வாக்களித்த பெருமக்களையும் நாம் மறக்கமுடியாது. அவர்களுக்கு அப்பா அவர்களின் செய்தியையே நம் வாழ்த்தாகவும் தந்து வாழ்த்துகிறோம்:

"தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் தேர்தலில் வெற்றி பெறும்படி எனக்கு வாக்களித்து ஆதரித்தும், நல்லெண்ண வாழ்த்துத் தெரிவித்தும் உதவிய உள்ளூர், வெளியூர் எழுத்தாள நண்பர்கட்கும் இந்தியாவெங்கும் கடல் கடந்தும் வாழும் ஆர்வத் தமிழ் எழுத்தாளர், புலவர், பேராசிரியப் பெருமக்களுக்கும் நான் தனித் தனிக் கடிதம் எழுதமுடியாமையால் என் நன்றியும் கடப்பாடும் இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்."

வாளும் வேலுமில்லாவிடின்...

—1-ம் பக்கத் தொடர்ச்சி—

விறு விறுப்பு; வீரர்களிடேயே புத்துணர்ச்சி; வெல்லும் முயற்சியில் விரைவு. இடையிலே ஓர் இளவரசன் அங்கும் இங்கும் அலைப்புண்டான். எதிரிகளின் தாக்குதலால் இளவரசன் கொடிதடுமாறி நிலைகெட்டுப் பின் வாங்கியது.

உயிரைப் பணயம் வைத்து ஒருவரோடு ஒருவர் வாள்களை உராய விடுகையில் இந்த மூலையிலே......போர்க்களத்தின் தடம் படாத கடைக்கோடியிலே தான் நின்றுகொண்டிருந்தான் அந்த உணர்ச்சியற்ற கோழை! அவன் சிந்தனை சுழன்றது: "அங்கே வதைகிறானே இளவரசன்; அவன் கையிலிருக்கும் நீண்ட கூரிய வாள்மட்டும் என் கையிலிருந்தால்... இதுவும் இருக்கிறதே, வாள் என்ற பெயரோடு...தொங்கும் திராட்சைக் கொடியை ஒன்பது வெட்டில் வீழ்த்திவிடும்! இதை வைத்துக் கொண்டு எவன் போராடுவான்? கூர்மையற்ற தகடு!"

எண்ணம் இப்படி ஓடியதும் ஓடினான்; கைவாளைத் தொலைவில் எறிந்தான், இரண்டு துண்டுகளாக்கி. பின் இளவரசன் அந்த இடத்தின் பக்கம் வந்தான்-தாக்கப்பட்டவனாய், தன் கையில் கருவி ஏதும் இல்லாது தள்ளாடியவனாய். படைக் கருவிக்கு வேட்டையாடிய அவன கண்களிலே, அந்தத் "தொடை நடுங்கி" முறித்துப் போட்ட வாள் பட்டது.

அந்த வாள் காய்ந்த மண்ணிலே, கிடந்தது. உடைந்த வாளைக் கண்டதும் உயர்ந்த பொருள் கண்ட வறிஞன் போல் மகிழ்ந்தான்; ஓடினான். உடைந்த வாள் அவன் உள்ளத்திலே புத்துணர்ச்சியை யூட்டியது. விரைந்தான செருமுகம் நோக்கி. புது மகிழ்வுடன், தான் கொண்ட உடைந்த வாளுடன் களத்தில் குதித்தான். மாற்றலர் தலையைப் பனங்காய்களாகச் சீவினான். அன்றைய வெற்றி கிடைக்க திறல் காட்டிய பெரு மறவனானான்.

வீரன் கருவிகளில் உயர்வு தாழ்வைக் காண்பதில்லை. கிடைத்ததை, நேரத்திற்கு ஏற்பப் பயன்படுத்திக்கொள்வதில்தான் முனைவான். 'அரங்கம் பழயது; ஆடவராது' என்று கூறும் பட்டியலிலே அவன் சேரான். இந்த உணர்ச்சிக் கருவூலத்தை-வீரக் கவிதையைப் பாடியவன் 'எட்வர்ட்ரோலண்ட்சில்". உடைந்த வாளை எடுத்துப் போராடியவனைவிட, கைவேலைக்களிற்றெருடு போக்கியவனைவிட, எதிரி தன் மார்பில் எய்த ஈட்டியைத் திரும்ப அவன் மீதே எறிந்த சிற்றரசனும் புறநானூற்று வீரனைவிட, வெட்டுண்ட தொடைகளை வீசி வேழத்தை விரட்டும் வீரன் எவ்வளவோ சிறந்தவன்! இவ்வீரர்கள் என்றும் இளமையுடைய நல்லெழில் வீரர்கள்!

-மா. பாண்டியன்

ஆசிரியத் தோழமைக்கு.

தென்றலைத் தொடர்ந்துப் படித்து வருகிறேன். சமீபகாலமாகத் தங்களால் எழுதப்பட்டு வரும் கட்டுரைக் கவிதைகள் "சாவு" "காதல்" "துணிச்சல்" இவைகள் கற்பனை உண்மை இவைகளின் முறை என்றே சொல்லலாம்.

ஒவ்வொரு வாக்கியமும் உண்மையின் நாதம்.

மேனாட்டறிஞர் பெருமக்கள் ஷா, ஜான்சன், டென்னிசன், தாந்தே, கதே, ஷேக்ஸ்பியர், நம்நாட்டு தாகூர் இவர்களின் வரிசையோடு தங்கள் படைப்புகள் வைக்க வேண்டியவை.

33 வயதில் இவ்வகை அருமைக் கருத்துக்கள் வெளிவருவது சாதாரணமானதல்ல. கவிஞன் இயற்கையாகவே பிறக்கிறான். உண்டாக்கப்படுவதில்லை.

தாங்கள் பிறப்பிலேயே கவிஞர் தான். தன்னை மறந்து உலகுக்கு வழங்கிய அப்பாவிக் கவிஞர் காலம் மறைந்துவிட்டது.

வாழ்க்கையை வளமாக்கிக் கொண்டே கவிஞனாக உயர்வது கடினம். தாங்கள் இதற்கு விதிவிலக்கு.

தங்கள் வார்த்தைகள் சொல்லடுக்குகள், ஒவ்வொன்றும் லட்சம் பொன் பெறும். இக்காலக் கவிஞர் உலகம் தங்களைத் தலைமீது வைத்து வணங்கவேண்டும்.

தூற்றல் புராணம் பாடும் புல்லுருவிகள் வாழ்க. அப்போதுதான் தங்கள் அருமைபெருமை நாற்புறமும் வீசும். பல்லாண்டு நீர் வாழ்க.

இன்பழகன், வேலூர்.

★

இவ்வாரத் தென்றல் இதழில் தங்களுடைய "சாவு"க் கட்டுரையைப் படித்தேன் நாட்டில் வாழ்கின்ற வசதிபடைத்த, செல்வங் குவிந்துள்ள சீமான்கள் அத்தத்துவங்களை ஏற்றுக் கொள்வார்களேயானால் நாட்டின் நலிவு சிறிது நீங்கும். என்னைப் பொறுத்தவரை ஒவ்வொரு நாளும் கழிந்தவுடன் என் வாழ்நாளில் ஓர் நாள் குறைந்துவிட்டது என்ற எண்ணம் உள்ளவன்தான். ஆண்டுத் துவக்கத்தில் ஞாபகக் குறிப்புப் புத்தகத்தில்கூட நான் கழிந்துபோன ஆண்டைப் பற்றி "என் வாழ்நாளில் ஓர் ஆண்டு பிரிந்துவிட்டது" என்ற முன்னுரையுடன் ஆரம்பித்து எழுதி வருகிறேன். "வாழ்வு சிறிது" வையகம் பெரிது என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டியதாகும். "எல்லாம் தனக்கே" என்று வாழ்க்கையில் அபார நம்பிக்கை வைத்திருப்பவர்களுக்கு உங்களுடைய "சாவு" நல்லதொரு பாடமாகும்! நன்றி.

நெல்லை-கபிலன், சென்னை-5.

★

தங்களின் வசன கவிதையாம் "சாவு"தனைப் படித்தவுடன் என் இதயத்துள் எழுந்த எண்ணம் இது. புதுமை விரும்பும் என்போன்றவர்க்கு நல்லதொரு விருந்து! கருத்தும் நடையும் ஒன்றையொன்று மிஞ்சுகின்றன. அற்புதமானபடைப்பு! இத்தகு சத்தான புதுமை நிறைந்த தங்களின் எழுத்தோவியங்கள் ஒவ்வொரு இதழிலும் இடம்பெற வேண்டும். அப்போது பக்கம் பதினாறு தேவையில்லை; இரண்டே போதும்.

வளர்க தென்றல். வாழ்க 'செத்துவிட்ட' நீவிர். வணக்கம்.

திமுக-பித்தன், உதகை.

★

ஒவ்வொரு கிழமையும்
ஓடிவந் தென்னகம்
செவ்விய தாகத்
'தென்ற'லே சாலும்.
அத்தனை பெருமையும்
அதற்குண் டெனினும்
எத்தனை நாளோ
ஏமாற் றிற்று!
போனநா ளெல்லாம்
பொறுத்திருந் தின்னாள்
கானகப் பூவின்
களிமது நாடும்
வண்டெனச் சுற்றி,
வாங்கினேன், 'தென்றல்'
உண்டதும் செத்தேன்;
உண்மையில் சாவுதான்
என்னுடல் மட்டும்
மண்ணிலே யுள்ளது!
மன்பதைக் கான
துன்பமோ இன்பமோ
என்வரை இல்லை;
இனியொரு சாவோ!
முன்பலர் செல்லப்
பின்பயம் ஏது?
செத்தவன் பின்னே
செல்பவன் ஒருநாள்
செத்தே போவான்
அத்தன்மை போகக்
கவிஞனின் பின்னிக்
கடையனும்
தவித்திட லின்றிச்
சாய்ந்தனன், 'சாவிலே'

அ. இரத்தினசாமி, கோவிலூர்.

19-12-'59 முதல் வெளிவருகிறது

சூடான அரசியற் கருத்துக்கள்! சுவைமிக்க கற்பனைகள்!

அன்றாட அரசியலின் ஆராய்ச்சி அரங்கு!

தி. மு. க. அணிவகுப்பில் முரசுகொட்டும் பொன்னேடு!

தாய் நாடு

ஆசிரியர்: T.K.சீனிவாசன்

தி. மு. க. வாரஏடு

விலை 16 காசு.

ஆண்டுச் சந்தா ரூ. 8. அரை ஆண்டுச் சந்தா ரூ. 4.

முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் விண்ணப்பிக்கவும்.

"தாய்நாடு" அலுவலகம், சென்னை-14.

—2-ம் பக்கத் தொடர்ச்சி—

அதற்கு? அண்ணா அவர்களின் எம். ஏ., பட்டம் கடைச்சரக்காக இருந்தால், சிவஞானங்களுக்கு வாங்கிக்கூடக் கொடுத்து விடுவோம்? என்ன செய்வது உங்களின் அலங்கோலம் இப்படியுள்ளது!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர்-பிரிவினைக் கொள்கையைக் கைவிட வேண்டுமென்று விரும்புகின்ற தலைவர்-சிவஞானக் கண்ணகி, வடநாட்டினர் வெள்ளையர்களைப் போல ஆதிக்க வெறியர்கள் அல்ல என்பதைக் காட்ட கலெக்டர்களை உதாரணமாக அழைப்பதைக் காண்கிறோம்! எல்லாக் கலெக்டர்களும் வடவர்களாக இல்லையாம். அதனால் வடவர் ஆதிக்கம் மாநில சுயாட்சியில் இருக்காதாம்! பாரதமாதாவின் பங்காளியும் இந்தியத் தமிழனுமான சிவஞானம் சொல்வது, இது. தென்னகம் வெள்ளையர் காலத்தில் இருந்ததை விட வளர்பிறையாக இருக்கிறதாம். தென்னாட்டு மந்திரிகளை மரப் பொம்மைகளாகவே மதிக்கிறார்கள் மத்திய ஆட்சியினர்! மானங்கெட்டுப் போனாலும் மரத்தமிழன் என்று பட்டம் சூட்டிக்கொண்டுள்ள சிவஞானத்திற்கு இது தெரிந்திருக்க வேண்டும். சென்னை சர்க்கார் எதைக் கேட்டாலும் நேரு சர்க்கார் எட்டி உதைக்கிறது! கேரளத்திலே கம்யூனிஸ்ட் மந்திரிகள் கேட்டார்கள். தட்டிப் பறித்துக்கொண்டார்கள் அவர்களது ஆட்சியை! "நான் முதலமைச்சராக இருந்தால் பூனையெனச் சீறி எலியெனப் பதுங்கி மத்திய சர்க்காரைப் பணியவைப்பேன்" என்றுகூட வளைந்த மீசையும் வளையாத நாக்கும் கொண்டுள்ள மரத்தலைவர் சொல்லுவார்! அதையும் வரவேற்கிறோம். அந்தத் தைரியம் இருந்தால் முன்னேற்றக் கழகத் தலைவர் "பிரிவினை மாயையிலிருந்து விடுபட்டுவிரைவில்பிரிவினையைக்கைவிட வேண்டு"மென்பதாக எழுதுவதையும் பேசுவதையும்நிறுத்திவிட்டுச் செயல்பட முன்வாருங்கள்! வ. உ. சி. யின் வாரிசாம் சிலம்புக்கூட வீரரைக் கண்டபிறகாவது வடவர்கள் தங்களது வெறியைக் குறைத்துக் கொண்டு தென்னகத்தின் தேவைகளை நிரப்புகிறார்களா எனக் கவனிப்போமாக!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சியத்தினைக் கைவிடும்படிப் பேசுகின்ற சிவஞானங்கள் இந்தக் காரியத்தில் முக்கியக் கவனம்செலுத்தினால் அவர்களின் முதுகெலும்பிலே உள்ள பலத்தினைப் புரிந்துகொள்ளலாம்! அவருடைய கழகமும் அவரது சீடர்களின் கலகமும் கால் துட்டுக்கும் பெறுதவை என்பதை எவரும் எடுத்துக் காட்டத் தேவையில்லை! இவர்களால் தில்லி பீடத்தவரைக் கவரும் கிளர்ச்சிகளைச் செய்யத் திறமையில்லை. எல்லைக் கிளர்ச்சிகளில் தலையைக் கொடுக்காமலே செய்த தீரச் செயல்களுக்கு எவரும் பாராட்டுக் கூறவில்லையென்று இன்றுகூடப் புலம்புகிறார் என்றால், அந்தத்தலைவர் புகழை எதிர்பார்த்துத் தேடி அலைந்து தேம்பும் குரல்தான் கேட்கிறது. அவருடைய கையிலே உள்ள 'கன்னக்கோல்' அவருடைய சீடர்களின் உள்ளத்தைக்கூடப் பெறமுடியவில்லையாம்! "இயக்கத் தோழர்களும்ஆதரவாளர்களும்கூட, 'செங்கோல்' வாங்கிப் படிப்பதில்லையென்றால் அதை நடத்துவதை விட, நிறுத்திவிடுவது நலம். ஆம்; மிகுந்த வருத்தத்துடனேயேஇதனைக் கூறுகின்றோம்"-பத்தாம் ஆண்டு நிறைவு தலையங்கப் பகுதியிலேதான் சிவஞானம் இப்படிக் கண்ணீர் வடித்திருக்கிறார்! தன்னுடைய தொண்டர்கள் அகில உலக அரசியல் சர்ச்சைகளில் கவனம் செலுத்திப் பெரிய அரசியல் தத்துவங்களையெல்லாம் .... மன்றத்தில் ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கும்போது, அனுதாபத்துக்குரிய தலைவர், "செங்கோல்" படிக்க வேண்டும் என்று பணிவுடன் கேட்கும் குரல் அவர்கள் செவியேறுமா என்பதை எண்ணிப் பார்க்கட்டும்! கலாச்சாரக் கழகத் தோழர்கள் 'கன்னக்கோல்' படிக்க விரும்பாதது எதனால்?

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல்பிரிவினைக் கேலி செய்கின்ற சிவஞானத்திற்குப் பாடம் புகட்டவே அவருடைய சீடர்களை கொண்டே 'கன்னக்கோல் அறிவுக்கோல் அல்ல' என்று சொல்ல வைத்துவிட்டார்கள் போலும்! செம்மையான செயல் முறைகள் இருந்தால்தானே கையிலே உள்ள கோல் உண்மையிலேயே செங்கோலாக இருக்கும்! அதனுடைய எழுத்தோட்டம் அறிவுலக மேதைகளைக் குறை சொல்லும் செங்கல் பண்பாகத்தானே இருக்கிறது! செங்கோலும் செங்கல்லும் தமிழரசுக் கழகத்தவரின் அறிவாயுதங்களாக இருக்கும்வரை சுயாட்சிக் கட்டிட வேலை சுலபத்தில் முடியப் போவதில்லை! கலாச்சாரத் தலைவர் கடமையுணர்ச்சியுடன் தாயகப் பற்றுடன் செயல்படுவது உண்மையானால் தன்னை முழு அளவுக்கும் மாற்றிக் கொள்ள வேண்டும்! தமிழர்தம் பாராட்டுக்குரியவராகவே வளர்ந்து வாழ்த்தப்பட வேண்டுமானால் 'கிராமணியார்' என்ற விருது பெற்ற வீரத் தலைவர், எல்லைகளை மீட்டு வந்த இருசப்பத்தெரு தந்த இமயவரம்பின் அரசியல் சாக்கடையில் தன்னை முதல் தலைவராக்கிக் கொள்ளாமல் தன்னைப் பின்பற்றுவோரையும் உயர்த்திட வேண்டும். முன்னேற்றக் கழகத்தவர் விடுதலை ஒளி காட்டும் வழி நோக்கி நடைபோடுகிறோம்! தொடர்ந்து வர முடியாதவர்கள், தோல்வித்தோடாக்களிலே வெற்றியைக் காண்பவர்கள், துவண்டு வீழ்ந்தவர்கள், துதி பாடுவதிலே கொள்கையை மறந்தவர்கள், சொந்தத் தாயகம் எது என்பதை இன்னும் புரிந்துகொள்ளாதவர்கள், இவர்கள் எல்லாம் சிவஞானத்தின் சீடர்களாக இருக்கிறார்கள் என்று அறிவுலகம் தருகின்ற சேதிகளைச் சிந்தனையில் கொண்டு செயல்படுவீராக! ★

ராஜாபார்லி
பிஸ்கட்ஸ்
• குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
...சங்குமின் லேடி, திண்டுக்கல்ரோடு, மதுரை.

நீடுழி வாழ்க!

வாழ்த்துகிறேன்: வாழ்க!

இன்று அவளுடைய பிறந்த நாள்.

அவள் பிறந்து இருபத்தோராண்டுகள் பிறந்துவிட்டன.

அவள் எனக்காகப் பிறந்தாள்!

— இப்படித்தான் நான் நினைத்தேன்; நினைக்கிறேன்.

'உனக்கென்று ஒருத்தி பிறக்காமலா இருந்திருப்பாள்!' என்பார்கள்.

எனக்கு இப்போது இருபத்தி ஆறு வயது. நான் பிறந்து ஐந்து ஆண்டுகள், எட்டு நாட்கள் வரை எனக்கென்று யாரும் பிறக்கவில்லை

— அதற்குப் பிறகு-அந்த ஒன்பதாம் நாளில்-அவள் பிறந்தாள்.

... ...

ஏழு ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு நாளில், நாங்கள் ஒருவரையொருவர் பார்த்தோம்.

அப்படியென்றால் அதற்குமுன் பார்த்ததே இல்லை என்று பொருளல்ல. இது ஒருவிதமான புதுப்பார்வை! அதுவரை காணாத தனிப் பார்வை!

அந்தப் 'பார்வை'க்குப்பின், அவளுடைய பிறந்த நாட்கள் எனக்கு மனப்பாடம்! தூக்கத்தில் எழுப்பிக் கேட்டால்கூட அந்த நாளை நான் மறக்காமல் சொல்லுவேன்.

ஆண்டுதோறும் அவளுக்குப் பிறந்த நாள் வருமல்லவா, அப்போது ஏராளமான வாழ்த்துக்கள் வந்து குவியும்.

உடன்பிறந்தோர், உயிர்த்தோழிகள் அதிகம் அவளுக்கு.

எல்லோரும் தமது வாழ்த்துக்களால் அவளைத் திணற அடிப்பார்கள்.

ஆனால், அவை எல்லாவற்றிலும் என்னுடைய வாழ்த்துக்களைத்தான் அவள் பெரிதும் எதிர்பார்ப்பாள். அவளை நான் வாழ்த்த வேண்டும், பாராட்ட வேண்டும், புகழவேண்டும் என்பதில் அவளுக்கு ஆசை அதிகம்.

... ...

அவளுடைய சென்ற பிறந்த நாளில் எனது வாழ்த்துக்களையோ, பரிசுகளையோ நான் அனுப்பவில்லை.

விடிந்தது முதல் எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாந்துபோனாளாம் அவள்.

அந்த ஏமாற்றம் அவளுக்கு அச்சத்தையும், அவநம்பிக்கையையும் என்மீது தோற்றுவித்து விட்டதாம்.

எல்லாம் என்னைக் காணும்வரைதான்.

ஆமாம்; சென்ற பிறந்தநாளில் அஞ்சலில் அனுப்புவதற்குப் பதிலாக, வாழ்த்துக்களைத் தெரிவிக்க நானே நேரில் போயிருந்தேன்.

அவள் சற்றும் எதிர்பாக்காத வாழ்த்தாக, பரிசுப் பொருளாக நானே வந்துவிட்டது அவளைப் பூரிக்க வைத்துவிட்டது.

'எண்ணி எண்ணி மாய்ந்திருந்த வேளையில் எதிர்பாராமல் வந்து குதித்துவிட்டீர்கள்' என்று வியந்தாள்.

'இப்போதுதான் நினைத்தேன். எதிரில் நிற்கிறீர்களே!' என்றாள்.

'எனக்குத் தெரியும் இந்த அதிசயம் நிகழப்போகிறது" என்று கூறிச் சமாளித்தாள்.

... ...

அவளுடைய அந்தப் பிறந்த நாளைக் கொண்டாட நாங்கள் திருக்குற்றாலத்துக்குப் போனோம். அருவியின் ஓசையையும், அயராத தென்றலையும், ஆசை நினைவுகளையும் ஒருசேரத் தரும் அந்தப் பொதிகை மலைச்சாரலில்......

இரவெல்லாம் 'விழா'தான்!

மல்லிகைப் பூக்களைப் போன்ற அவளுடைய கண்களும், மாதுளை விளிம்புகளைப் போன்ற அவளுடைய உதடுகளும், ரோஜாக் கன்னங்களும், நீண்டு-இடையில் சற்று வளைந்து-நிமிர்ந்து நிற்கும் எள்ளுப்பூ நாசியும், வளைந்த புருவங்களும், வளராத நெற்றியும்...எல்லாவற்றையும்விட அவளிடம் மட்டுமே காணக்கூடிய அந்தப் புன்னகையும், அப்போது தெரியும் அந்த முல்லைப் பல் வரிசையும்......எல்லாமே 'விழா'தான்!

'வாழ்த்துக்கள்!' என்றேன்.

'வாழ்க!' என்றாள்.

'பிறந்தநாள் உனக்கல்லவா; வாழ்த்த வேண்டியது நான்தானே?!' என்றேன்.

'உண்மைதான். அதனால்தான் வாழ்த்துகிறேன்' என்றாள்.

எனக்குப் புரியவில்லை. பிறகு அவள் விளக்கினாள்:

'நீங்கள் வாழ்ந்தால், உங்கள் அன்பு வாழும். அன்பு வாழ்ந்தால் நான் வாழ்வேன். புரிகிறதா?'

நான் வியந்தேன்.

'அடுத்த பிறந்தநாளை நாம் நமது இல்லத்தில் - நமக்கென்று நாம் உருவாக்கும் 'தனிக் குடித்தன'த்தில் - கொண்டாடுவோம்' என்றேன்

'அதற்கடுத்த பிறந்தநாளில், அந்த விழாவில் கலந்துகொள்ள புதிய அரும்பு ஒன்று பிறந்திருக்கும்' என்றாள் அவள்.

இப்போது புரிந்துகொண்டு நான் சிரித்தேன். அந்தச் சிரிப்பில் அவளும் கலந்துகொண்டாள் எப்போதும் போல.

... ...

இன்று அவளுடைய 'அடுத்த' பிறந்தநாள்.

எங்களுக்கென்று அமைக்கப்பட்ட வீடு இருக்கிறது. விழா நாளும் வந்துவிட்டது.

எனினும், விழாவுக்குரிய அவள் என்னை விட்டு வெகுதூரத்திலிருக்கிறாள்.

வாழ்த்த வேண்டியவன் இங்கிருக்கிறேன்.

வாழ்த்தைப் பெறவேண்டியவள், எங்கோ இருக்கிறாள்.

இங்கிருந்து நான் அனுப்பும் இந்த வாழ்த்து அவளிடம் சேர்ப்பிக்கப்படுமோ, என்னவோ!

எனினும், என் கடமையை நான் செய்கிறேன். இதயபூர்வமாக - மாசில்லாத நெஞ்சத்துடன்-எவரிடமும் காணமுடியாத தூய்மையான மனத்துடன் அவளை நான் வாழ்த்துகிறேன்:

'நீடுழி வாழ்க!'

ஏனென்றால் நான் வாழவேண்டுமே!

அவள் வாழ்ந்தால்தானே எனக்கு வாழ்வு!

—ப. புகழேந்தி.

செழியன் உலா

குருட்டுப் பூனைகள் தப்பித்தவறி விட்டத்தில் பாய்ந்துவிட்டால், அவை குதி குதி என்று குதிக்குமாம். இதை நண்பர் ஒருவர் சொன்னபோது நான் நம்பவில்லை. ஆனால் அண்மையில் சட்டமன்ற நடவடிக்கைகளைக் கேட்ட போது என் முடிவைத் திருத்திக் கொண்டேன்.

தமக்கென்று குடியிருக்கக் குச்சுமின்றி அலைந்த பலரைக் கண்ணால் கண்டிருக்கிறேன். அவர்களெல்லாம் சுதந்திரம் வந்ததும், "தியாக வியாபாரம்" செய்யக்கிளம்பினர். வலுவுள்ள தியாக வியாபாரிகளின் நிலை உயர்ந்தது. புது வாழ்வு பெற்றதும் — திடீர்ப் பணக்காரர்களானதும் அவர்கள் போடும் ஆட்டம் சொல்லிமுடியாது! 'டன்லப் டியூப்' போல அவர்கள் தொந்தி பெருகுகின்ற வேளையிலே, பல்லாயிரவர் வயிறு காற்றுப்போன பலூன்களாகிக் கிடப்பதை உணராமல் பேசுகின்றனர்.

x x x

தென்மாவட்ட மொன்றில் உள்ள ஓரிரு எம். எல். ஏ. க்களின் வாழ்க்கையை நன்கறிவேன். சுதந்திரத்திற்கு முன்னர் அவருள் ஒருவர் நடையாய்த்தான் அலைந்தார். அவருக்கென்று எந்தச் சொத்தும் இல்லை, வேறு எந்த வருமானமும் இல்லை - அன்று. அவர் மனைவி பெயரிலும், மகள் பெயரிலும் நான்கைந்து வீடுகளும், ஆற்றோரத்தில் பல நன்செய் நிலங்களும் இருக்கின்றன - இன்று. அவரும் இதுவரை எந்தத் தொழிலும் செய்ய வில்லை; அவர் மனைவியும் மக்களும் அப்படியே. அவரது எம். எல். ஏ. சம்பளத்தின் மிச்சம் என்றும் இதைச் சொல்வதற்கில்லை. அவர் இந்தத் தடவைதான் எம். எல். ஏ. ஆனார்; இருபத்தொரு திங்களில் அவருக்குக் கிடைத்த சம்பளம் 3150 ரூ தான்; படி சுமார் ரூ 1000 கிடைத்திருக்கலாம்; என்னதான் மிச்சம் பண்ணியிருந்தாலும், ஒரு லட்ச ரூபாய் பெறுமான சொத்தை எப்படி அடைந்தார்? இதைத் "தியாக வியாபாரம்" என்று சொல்வதிலென்ன தவறு? இவர்களைத்தான் "தியாக அரசர்கள்" எனப் பட்டம் சூட்டி அழைப்பதில் என்ன தப்பு? காலம் வரும்போது மக்கள் அந்தக் கணக்கைக் கேட்கத்தான் போகிறார்கள். அப்போது இவர்கள் படும் பாட்டை...

x x x

கட்டை விரலை வாங்கிவிடுவேன் என முழங்கியவர்கள் முகத்திற்கெதிரே, கழகத் தோழர்களின் வலிய கைகள் உயர்ந்து நிற்பதை உணராத ஒருவர் "விரல்களை வாங்குவ"தில் இறங்கியிருக்கிறார். இவரது தொகுதியிலே இவரது கொடி கட்டிப் பறக்கிறதாம். வீராதிவீரர்கள் இருந்த இடமே தெரியவில்லை. இப்போது கிளம்பியிருக்கும் இவரது தொகுதியில் எத்தனை பஞ்சாயத்துக்கள் எப்படியாயின என்பதை இவர் தொகுதி அறியும். பெரிய குளம் நகராட்சியில் இப்போது எத்தனைபேர் காங்கிரசல்லாதார் என்பதை இவர் தொகுதி அறியும். இவர் இப்போது எடுத்திருக்கும் செயல்கள் படும்பாடு இவர் தொகுதியாய் வெட்ட வெளிச்சம். பஞ்சாயத்துக்கள் பலவற்றை இழந்துவிட்ட இந்த வீராதி வீரர் தான் தன் தொகுதியில் தன்னாட்சியே நிலவுவதுபோல் பேசியிருக்கிறார். 1962 வருவதை மறந்துவிட்டாரோ? எதிரிகளின் விரல்களை வாங்குவதன் மூலம் வாக்குகளை வாங்கிவிட முடியாது. நாமெல்லாம் மக்கள் அன்பால் ஓரளவு வாக்குகளைப்பெற்று வந்தோம். அவர்கள் ஐயாயிரம் பத்தாயிரம் என்று அதிக வாக்குகளை வாங்கி வந்தவர்களல்லவா! இனிமேலாகிலும் அந்த எம். எல். ஏக்கள், வாக்குகளைப் பெறும் செயலில் இறங்கட்டும். அத்தோடு கட்டை விரலை வாங்கப் புறப்பட்டவர் கற்ற பாடத்தையும் உணரட்டும்!

x x x

தியாகராசன் என்ற உறுப்பினர் (மதுரை மாவட்டம் - தேனித் தொகுதி) "நகரத்தில் இருப்பவர்களெல்லாம் சோம்பேறிகள். ஒருவர் சம்பாதிக்க ஒன்பதுபேர் உட்கார்ந்து சாப்பிடுவார்கள். மின்சார விசிறிக்குக் கீழே உட்கார்ந்து கொண்டு சம்பளம் போதவில்லை என்று ஏன் கூறவேண்டும்?" என்று பேசினாராம்.

இதைக் கேட்ட பிறகுதான் எம். எல். ஏக்கள் விடுதிக்குச் சென்று பார்த்தேன். மவுண்ட் ரோடில் இருக்கும் அவ் விடுதி, ஆலமரத்தடியில் குடிசை குடிசையாகத்தான் இருக்கின்றது. அடடா! அங்கே காங்கிரசு எம். எல். ஏக்களெல்லாம் கட்டாந்தரையில்தான் படுத்திருக்கிறார்கள்? தலையணைக்குப் பதில் கல்லணைகளே இருக்கின்றன. அங்கே "பான்" இல்லை; மின்னும் விளக்கில்லை; குளிக்கு மறைகள் இல்லை; கூப்பிட்ட குரலுக்கு ஓடிவர ஆளில்லை! எல்லாமே வார்தாக் கிராமம் மாதிரி தான்!

சட்ட சபைக்குப் போனால், அங்கேயும் காங்கிரசு உறுப்பினர்கள் மட்டும் மரத்தடியிலேதான் இருக்கிறார்கள். மற்ற உறுப்பினர்கள்தான் மின்சார விசிறியின் கீழ் இருக்கிறார்கள். அதோடு கூடக் காலஞ்சென்றவரும் நந்தன் வழி வந்தவரும் ஆன ஒரு காங்கிரசு உறுப்பினர், "எம். எல். ஏக்கள் சம்பளத்தை உயர்த்த வேண்டும்!" வேண்டும்!" என்று முன்பு சொன்னதை இவர்கள் முழுக்க முழுக்க மறுத்து விட்டார்களாம். தமக்கு ஏற்கனவே தரும் நூற்றி ஐம்பதையும் வெறும் 15 ஆகக் குறைக்கச் சொல்லிக் கிளர்ச்சி செய்யப் போகிறார்களாம். "பானுக்கடியிலிருந்து கொண்டு சம்பள உயர்வு கேட்கும்" கல்நெஞ்சர்களே! மரத்துக்கடியில் உண்டு உறங்கும் எங்கள் காங்கிரசு எம். எல். ஏக்களைப் பார்த்துத் திருந்துங்கள். இன்றேல், உங்கள் அனைவரையும் சுட்டுப் பொசுக்கி விடுவோம்!

x x x

இன்னொரு அம்மையார் ஆட்டக் கலையைக் கற்றுக்கொண்டு வருபவர். "அவர் ஆடத் தொடங்கினால் அலாரிப்பு முதல் வணக்கம் வரை ஒரே அமர்க்களம்தான், போ!" என்று சொல்லக்கூடிய காலம் அண்மையில் வரப்போவதாகக் கேள்வி. இந்த ஆடற் கலைப் பயிற்சியால் அவர் வாய் எப்போதும் "ஆட்டம்! ஆட்டம்" என்று சொல்லிக் கொண்டிருக்கிறது. எதிர்க்கட்சி உறுப்பினர்களின் வாலாட்டம், திட்டங்கள் நிறைவேறினால் நடக்காது என்று பேசினாராம். நம்மைப் பொறுத்த வரையில் "வாலாட்டம்" என்பதற்குப் பொருள் தெரியவில்லை. ஒரு வேளை, அந்த அம்மையார் தன் பயிற்சிக்குப் பின் அரங்கேறி ஆடப் போகும் ஆட்டங்களுள் ஒன்றாக இருக்கலாம் அந்த வாலாட்டம். எதற்கும் பொறுத்திருந்து பார்ப்போம். ★

மணக்கிறது

டிசம்பர் முல்லை!

★

தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர்

கா. அப்பாத்துரையார் - மொழிநூலின் வருங்கால வளர்ச்சி.

ஆசிரியர் கண்ணதாசன் - நான்.

கவிஞர் முடியரசன் - தமிழ் என் தந்தை.

,, தமிழண்ணல் - உழத்திமேல் காதல்.

,, ந. அலி பி. ஏ. - புதிர் வாழ்க்கை.

மற்றும் பல கலை விளக்கங்கள்.

★

விலை 25 காசு.

பொறுப்பாளர் - முல்லை - சென்னை-6.

ஆசிரியத் தோமருக்கு

அன்புடையீர்!

தாங்கள் எழுதிவரும் 'சாவு' - 'காதல்' அனைய கருத்தோவியங்களைப் படித்தேன்; சுவை நுகர்ந்தேன்.

கவிதை ஓவியங்களாகப் பிறக்க வேண்டியவை கருத்தோவியங்களாகப் பிறந்துள. குழந்தை ஆணாகப் பிறப்பதும் பெண்ணாகப் பிறப்பதும் பெற்றோரின் விருப்பத்தைப் பொறுத்தல்லவே. தோன்றிய வாறு, அவை பிறப்பெடுத்துள. ஆயினும் சிறப்பிற் சிறிதும் குறைவில்லை.

உங்களிடம் தயக்கமில்லை; அச்சமில்லை; ஒளிவும் மறைவும் ஒரு சிறிதும் இல்லை. நீங்கள் கவிஞரே என்பதற்கு இவையே சான்றாகும்.

'சாவின்" அமைவு - Form - எனக்கு மிகவும் பிடித்தது. பிற ஓவியங்களிலும் இவ்வமைவு பின்பற்றப் படுமேல், தமிழ் இலக்கியத்தில் இவை தனியிடம் பெறும்.

பிறர்போல் ஒப்புக்குப் பாராட்டவில்லை உண்மையை - நினைத்ததை எழுதினேன்.

தமிழண்ணல், காரைக்குடி.

★

தங்கள் 'சாவு" என்னை மிகவும் கவர்ந்தது. வால்ட் விட்மனின் கவிதை வரிகளைப் படிக்கும் உணர்ச்சி ஏற்படுகிறது. கவிதையா? வசனமா? ஆராய்ச்சித் தேவையில்லை. சிந்தனைச் சுழலில் ஏற்பட்ட சொற்சித்திரம். "சாவு" என்று தலைப்பிருந்தாலும் - சாகாத - சிந்திக்கத்தக்கத் தத்துவ விளக்கம். ஆங்கிலப் பேரிலக்கியத்தின் ஒளிமணிகளுள் ஒன்றான, தாமஸ் கிரேயின் "Elegy written in a Country Churchyard" உடன் ஒப்பிடத்தக்கது.

எஸ். லட்சுமணன்,
ஜோலார்பேட்டை

★

கவிஞர் கண்ணதாசனார் அவர்களின் அறிவுக் களஞ்சியங்களான "போதனை" "காலம்" "சாவு" "காதல்" இவை அனைத்தும் கண்ணாடிச் சட்டம் போட்டுப் பாதுகாக்கக் கூடியவையாகும். ஆனால்...

"சாவு" என்ற கட்டுரை என் போன்றவர்களுக்கு இதயத்தை வேல்கொண்டு செருகுவது போன்று உள்ளது.

கவிஞர் கண்ணதாசனாரின் "சாவு" என்ற துன்பச் சொல் மேலும் வேதனையை உண்டாக்குகின்றது. திரையுலகிலே இரண்டு கண்கள் - இரு கவிஞர்கள் தான் இருக்கின்றார்கள். ஒன்று "பட்டுக்கோட்டை". இரண்டு நம் "கவிஞர்". ஒருவர் சாய்ந்து மடிந்துவிட்டார். நம் கவிஞர் அவர்கள் சாவை அடிக்கடி ஞாபகப்படுத்துப்படியான "சாவு" போன்ற கட்டுரைகளை எழுத வேண்டாம் என்றுதான் கருதுகிறேன்.

பி. இராமாநுசன், மதுரை.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணசலம், எ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6, தமிழ்நாடு
தொலைபேசி எண் 83510.